## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) (திருத்தச்) சட்டம்

---

*[1987 ஜூன் மாதம் 02 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987 யூன் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம்75*

1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) (திருத்தச்) சட்டம்

[1987 ஜூன் மாதம் 02 ஆம் தேதி அத்தாசிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 13/86
1806

# 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டத்தின், 8 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உரிமங்களால் வழங்கப்படும் அதிகாரம்.

8. உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும் அமைய எவரேனும் ஆளுக்கு வழங்கப்படும் உரிமமொன்று, உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதியையும், அத்தகைய அளவினை அல்லது அளவுகளையும்கொண்ட பண்டங்களை, இலங்கையில் இறக்குமதிசெய்ய அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்ய அத்தகைய ஆளுக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 11உ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

3. பின்வரும் புதிய பிரிவானது 11ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின் உட்புகுத்தப்படுவதுடன் அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 11உ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஒழுங்குவிதிகளுக்கு முரணாக நடக்கும் இறக்குமதியாளர்களின் நிரலை வெளியிடுதல்.

11உ. எவரேனும் இறக்குமதியாளர், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தரங்களை உறுதிப்படுத்தாத எவையேனும் பண்டங்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்துள்ளாரெனக் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தேசிய பொருளாதாரத்தின் அக்கறைக்காகவும் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், அத்தகைய இறக்குமதியாளரின் பெயரையும், விலாசத்தையும், அத்தகைய இறக்குமதியாளரின் ஆளடையாளத்தைக் கண்டறிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும், குறித்துரைக்கும் நிரலொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும்.".

ஏ 095345 —2,845 (02/87)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

" தவறுகளுக்கான தண்டனை.

17. (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியெனச் சந்தேகிக்கப்படும் ஆள் ஒவ்வொருவரும் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும். இச்சட்டத்தின் அல்லது தகுதிக்கட்டுப்பாட்டின் தரம் தொடர்பாக இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக எவையேனும் பண்டங்களை இறக்குமதிசெய்தல் தொடர்பிலான தவறின் விடயத்தில், அத்தகைய பண்டங்கள் அரசுக்குப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டுமென நீதிவான் கட்டளையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் பறிமுதல்செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள், அத்தகைய பறிமுதலின்மேல், அரசுக்கு முழுதாக உரித்தாக்கப்படுதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கல் பின்வரும் சந்தர்ப்பங்களில் பயனுறுதலும் வேண்டும் :—

(அ) பறிமுதல் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படாதிருக்குமிடத்து பறிமுதல் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, மேன்முறையீடொன்று எக்காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படவேண்டுமோ அக்காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் ; அல்லது

(ஆ) பறிமுதல் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்குமிடத்து பறிமுதல் கட்டளையை உறுதிப்படுத்துகின்ற அல்லது நிலைநிறுத்துகின்ற அத்தகைய மேன்முறையீட்டுத் தீர்மானத்தின்மேல் ;

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் பண்டங்களின் உடைமையை, கட்டுப்பாட்டாளர் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் உகந்ததென எண்ணக்கூடியவாறு, அவற்றை அவர் விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம். கட்டுப்பாட்டாளர் அத்தகைய எவையேனும் பண்டங்களை விற்குமிடத்து, விற்பனையிலான வரும்படிகள் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது விவரணத்தினதான ஏற்றுமதி செய்யப்படக்கூடிய அல்லது இறக்குமதி செய்யப்படக்கூடிய பண்டங்களின் தரங்களை ஒழுங்குபடுத்துதலும், தகுதியைக் கட்டுப்படுத்துதலும்.".